# Scheme for Leadership Development of Minority Women

# சிறுபான்மையினப் பெண்களிடையே தலைமைப் பண்பினை மேம்படுத்தும் திட்டம்

## Ministry of Minority Affairs

## சிறுபான்மையினர் விவகாரங்களுக்கான அமைச்சகம்

Scheme for Leadership Development of Minority Women

சிறுபான்மையினப் பெண்களிடையே தலைமைப்பண்பினை மேம்படுத்தும் திட்டம்

**பின்னணி**

### Background

1.நாட்டிலுள்ள பெண்களின் நிலை குறிப்பாக சமூகத்தில் ஒடுக்கப்பட்ட பிரிவைச் சார்ந்த பெண்களின் நிலை மிகவும் பின்தங்கியும்/ஆதரவற்றதாகவும் உள்ளது.ஒரு பெண் குழந்தை பிறப்பதற்கு முன்பே வேற்றுமைக்கு உள்ளாகிறாள்.பிறந்த பின்பும் வீட்டில் உணவு, கல்வி,உடல் நலம் காத்தல் போன்ற அடிப்படை வசதிகளைப் பெறுவதிலும் வேற்றுமைக்கு உள்ளாகிறாள். பருவமடைந்த பிறகு இளம் வயதில் திருமணம் செய்து கொள்ளும் நிலைக்கும் கட்டாயமாக தள்ளப்படுகிறாள். கிராமப்புறங்களில் வசிக்கும் பெண்களில் பெருபான்மையினர் சமைப்பது, தண்ணீர் எடுப்பது,குழந்தைகளை வளர்ப்பது,காட்டு வேலை செய்வது மற்றும் கால்நடைகளை வளர்ப்பது போன்ற கடுமையான வேலைகளைச் செய்கிறார்கள். இவ்வாறு வீட்டு வேலைகள் மற்றும் வெளி வேலைகள் என இரு சுமைகளை சமாளித்தாலும் அவைகள் வெளிப்படுவதில்லை. மாறாக ஆண்கள்,பெண்களால் வளர்க்கப்படும் கால்நடைகளில் இருந்து கிடைக்கும் பாலை விற்பனை செய்வதும்,விதையிட்ட தானியங்களை விற்பனை செய்வதுமான வெளி வேலை க ளை எடுத்துக்கொள்கிறார்கள். சிறுபான்மையினர் இனத்தைச் சேர்ந்த பெண்கள் மிகவும் மோசமான நிலையில் உள்ளனர். அவர்கள் சிறுபான்மையினர் மட்டுமல்ல, 'விளிம்பு நிலையிலுள்ள பெறுபான்மையினர் 'ஆவர். மேலும் பெண்கள் குடும்பத்தில் முக்கிய முடிவெடுப்பதிலும் ஒதுக்கியே வைக்கப்படுகின்றனர். சமுதாயத்தோடு தொடர்புடைய அனைத்து வெளி வேளைகளையும் ஆண்களே முடித்து விடுவதால், பெண்கள் சமுதாயத்தில் உள்ள தொடர்பிலிருந்து துண்டிக்கப்படுகிறார்கள்.இதனால் சமுதாயத்தில் ஆண்களுக்குத் தரப்படும் பாராட்டுதல்களில் சமபங்கு பெண்களுக்க க் கிடைப்பதில்லை.

2. பெண்களின் வளர்ச்சி அவர்களது சம உரிமையில் மட்டுமல்லாது,வறுமையை எதிர்த்து போராடுவதிலும், பொருளாதார வளர்ச்சியிலும்,குடிமை சமூகத்தை மேம்படுத்துவதிலும் பெரும் பங்காற்ற வேண்டும். வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ள குடும்பங்களில் வசிக்கும் பெண்களும், குழந்தைகளும் பெருமளவில் பாதிக்கப்படுகிறார்கள். மேலும் இந்நிலையில் அவர்களுக்கு நல்ல ஆதரவும் தேவைப்படுகின்றது.பெண்ணுரிமையை மேம்படுத்துவதில் குறிப்பாக தாய்மார்களின் உரிமையை மேம்படுத்துவது முக்கிய பங்கு வகிக்கின்றது. ஒரு குடும்பத்தின் இதயமாக இருக்கும் தாய்மார்களின் உரிமையை மேம்படுத்துவதால் தனது வருங்கால சந்ததியினரை அவர்கள் அறிவூட்டம் பெறச் செய்தும்,ஊக்குவித்து நலம் பெறச் செய்தும்,நல்ல பண்புள்ள சந்ததியினராக மாற்றுவர்.

3. இந்தியாவில் உள்ள இஸ்லாமியர்களின் சமூக பொருளாதார, கல்விநிலைக்கான மேல் மட்ட குழு,சில கருத்துக்களை அடிக்கோடிட்டு ஓர் அறிக்கையை (சச்சார் அறிக்கை) உரு வாக்கியுள்ளது. அவ்வறிக்கையின் படி இந்தியாவில் உள்ள சிறுபான்மையினர் சமூகத்தில் இஸ்லாமியர்கள் பெரு ம்பான்மையினர் ஆவார்கள். இதில் 13.83 கோடி இஸ்லாமியர்கள் பொருளாதார வளர் ச்சிப்பாதையில் இருந்து ஒதுக்கப்பட்டுள்ளனர். அவ்வினத்தைச் சேர்ந்த பெண்கள் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்நிலையைக் கருத்தில் கொண்டு, பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம் (WCD) 2007-2008 ஆம் ஆண்டு "சிறுபான்மை மகளிருக்கு வாழ்க்கை,வாழ்வாதாரம் மற்றும் குடிமக்களுக்கு அதிகாரமளிக்கும் " திட்டம் ஒன்றை வரையறுத்தது. அது சிறுபான்மை சமூகத்து பெண்களிடையே ஏழ்மை நிலையிலுள்ளவர்களுக்கு முறையாகச் சென்றடைந்துள்ளது. அதன் வளர்ச்சிக்காக 2009 -10 ம் ஆண்டில் சிறுபான்மை விவகாரங்கள் அமைச்சகத்திற்கு மாற்றப்பட்டுள்ளது. பின்பு சிறுபான்மை விவகாரங்கள் அமைச்சகம் திட்ட த்தினை பொருத்தமாக மறு உருவகம் செய்து"**சிறுபான்மை பெண்களிடையே தலைமைப் பண்பினை வளர்க்கும் திட்டம்**" என்று மறு பெயர் இட்டுள்ளது.

**இலக்கு குழு மற்றும் இலக்குகளைப் பிரித்தளித்தல்**

## Target group and distribution of targets

4. சிறுபான்மையினோருக்கான தேசியக் குழு சட்டம் 1992 2(c)-ன் படி இஸ்லாமியர்கள், சீக்கியர்கள், கிருஸ்துவர்கள், புத்த மதத்தவர்கள் மற்றும் சௌராஷ்ட்டியர்கள் ஆகியவை சிறுபான்மை சமூகங்களாகவும், இச்சமூகங்கள் சிறுபான்மை விவகாரங்கள் அமைச்சகத்தின் மூலம் சேவைகள் பெறும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. இத்தகைய சிறுபான்மையினர்

சமூகத்தில் உள்ள தகுதியுடைய பெண்களே இலக்கு.மேலும் சமுதாயத்தில் பிரிவினையை ஒழித்து ஒற்றுமையை வலுப்படுத்தவும்,மேம்படுத்தவும், மேலும் பெண்கள் தங்களைச் செம்மைப்படுத்திக் கொள்ளவும் இச்சட்டம் சிறுபான்மையினர் சமூகத்தோடு, பெரும்பான்மையினர் சமூகத்தில் இருந்து வரும் பெண்களை (மொத்த விழுக்காட்டில் 25 விழுக்காட்டிற்கு மிகாமல்) சேர்த்துள்ளது. இந்த 25 விழுக்காட்டில் தாழ்தப்பட்டவர்கள் (SC),பழங்குடியினர்(ST), இதர பிற்படுத்தப்பட்ட்வர்கள் (OBC) சமூகத்தில் இருந்து வரும் பெண்கள், மாற்றுத்திறனாளி பெண்கள், மற்றும் இதர சமூகத்தைச் சேர்ந்த பெண்கள் ஆகியோர் இருத்தல் வேண்டும். உள்ளாட்சி மன்றங்களுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஏதோவொரு சமூகத்தைச் சார்ந்த பெண்மணியைப் பயிற்சி பெறுபவராக இருக்க ஊக்குவிக்க வேண்டும்.

**நோக்கம்:**

## Objective

5. சிறுபான்மையினர் சமூகத்தைச் சேர்ந்த பெண்கள், தங்களது அண்டை வீடுகளில் வசிக்கும் பிற சமூகத்தைச் சேர்ந்த பெண்களோடு பழக வைக்கவும், தன்னம்பிக்கை மற்றும் அறிவை வளர்த்துக் கொள்ளவும் அரசின் புதிய திட்டங்கள், வங்கிகள் மற்றும் அனைத்து நிலையில் உள்ள இடைப்பட்ட அலுவலகங்களுக்கு நேரடியாக தொடர்பு கொள்ளச் செய்தலும் இச்சட்டத்தின் முக்கிய நோக்கமாகும். பெரும்பாலான பெண்கள் பழங்கால வாழ்க்கை முறையில் செய்து அலுத்துப்போன தினசரி வேலைகளைத் திரும்ப திரும்ப செய்து வருகின்றனர். இருப்பினும் அவர்களுக்கு தேவையான , போதுமான அளவு உணவும் வருவாயும் கிடைக்காமல் உள்ளனர். மேலும் அவர்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகள் மற்றும் இதர வசதிகளும் இல்லாமல் இச்சமூகத்தில் வறுமையால் சூழப்பட்டுள்ளனர். இத்தகைய பெண்கள் தாமாகவே முன்வந்து தங்களது உரிமைக்காகவும் வறுமையைக் குறைக்கவும் போராடாவிடில் அவர்களது வறுமை நீங்க வெகுகாலம் ஆகும். வீடு, சமூகம் போன்ற குறிப்பிட்ட எல்லைகளுக்குள் வாழும் சிறுபான்மையினர் சமுதாயப் பெண்களுக்கு அதிகாரம் அளித்து, ஊக்குவித்து, எழுச்சி பெறச் செய்து அவ்வெல்லைகளை விட்டு வெளியே கொண்டு வந்து, தலைமைப்பாத்திரத்தை ஏற்று தேவைப்படும் வசதிகள்,சேவைகள், வாய்ப்புகள் , திறமைகள் முதலியவற்றைப் பெறுவதில் தங்களின் உரிமைகளை நிலைநாட்ட அவர்கள் ஒன்று திரண்டோ அல்லது தனித்தனியாகவோ போராட வேண்டும். இத்துடன் தங்களின் வாழ்க்கைத் தரம் மேம்படுத்துதல் தொடர்பான மேம்பாட்டு பலன்களில் தங்களுக்குக் கிடைக்க வேண்டிய பங்கைக் கோரவும் வேண்டும்.இதற்கு பெண்களுக்கு

சிறப்பான முறையில் பயிற்சி அளித்து தலைமைப் பண்பை வளர்த்தல் அவசியம். அவ்வாறு அளிக்க தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள்/நிறுவனங்கள்/அமைப்புகளுக்கு நிதி உதவி அளிக்கப்படும்.

தலைமைப் பண்பு

## Leadership

6. வீடு, சமூகம் போன்ற குறிப்பிட்ட எல்லைகளுக்குள் வாழும் சிறுபான்மையினர் சமுதாயப் பெண்களுக்கு அதிகாரம் அளித்து, ஊக்குவித்து, எழுச்சி பெறச் செய்து அவ்வெல்லைகளை விட்டு வெளியே கொண்டு வந்து, தலைமைப்பாத்திரத்தை ஏற்று தேவைப்படும் வசதிகள்,சேவைகள், வாய்ப்புகள் , திறமைகள் முதலியவற்றைப் பெறுவதில் தங்களின் உரிமைகளை நிலைநாட்ட அவர்கள் ஒன்று திரண்டோ அல்லது தனித்தனியாகவோ போராட வேண்டும். இத்துடன் தங்களின் வாழ்க்கைத் தரம் மேம்படுத்துதல் தொடர்பான மேம்பாட்டு பலன்களில் தங்களுக்குக் கிடைக்க வேண்டிய பங்கைக் கோரவும் வேண்டும்.இத்தகைய நிலைக்கு பெண்களுக்குச் சக்தி அளித்து அதிகாரம் பெறச் செய்வதே இங்கு தலைமைப் பண்பு எனப்படுகிறது.

### Community based organization/non-governmental organization/ organizations/institutions

**சமூக அடிப்படையிலான** அமைப்புகள்/ அரசு சாரா நிறுவனங்கள்/ நிறுவனங்கள் /அமைப்புகள்

7. சிறுபான்மையின பெண்களின் தலைமை பண்பு வளர்க்கும் திட்டத்தில் பயிற்றுவிப்பும், ஊக்கமூட்டி போராடச் செய்தலும் ஆழமான மற்றும் தீவிரமான கள நடவடிக்கையாகும்.அதற்கு ஆர்வலர்களின் தொடர்ச்சியான ஈடுபாடும், அவர்களின் சேவைகள் இலக்கு குழுவினரின் வீட்டு வாயில்களிலேயே கிடைக்கச் செய்வதும் அவசியம். இத்திட்டத்தைச் செயல்படுத்தும் நிறுவனத்தின் அதிகாரிகள் அவ்வப்போது கிராமம்/இடத்திற்குச் சென்று தலைமைப் பண்பிற்கான பயிற்சியை எடுத்துக்கொண்ட பெண்களுக்கு ஊக்கமளிப்பதையும் உடன் செயல்படுவதையும் செய்ய வேண்டும். .ஆகையால் அவர்கள் தங்களுக்கு கற்பிக்கப்பட்ட உத்திகள் மற்றும் நுட்பங்களைப் பயன்படுத்த வழி காட்டப்பட்டு அவர்களின் முயற்சிகளின் பலன்களைக் காண இயலும். அத்தகைய ஆழமான

கள நடவடிக்கைகள் அதிகமாகவும் அர்ப்பணிப்புடனும் செயல்படும் சமூக அமைப்புக்களுக்கு மிகவும் சிறந்ததாகும். பெண்களின் இயல்பானத் தன்மையினால் வீட்டு வேலைகளுக்கு ஏதுவாக வீட்டிற்கு அருகிலேயே தங்குவர் என்பதால் இந்தத் திட்டத்தைச் செயல்படுத்தும் அமைப்பு பயிற்சியை நடத்தத் தேவையான அனுபவம், மனித வளம் மற்றும் தேவைப்படும் இதர மூலங்களை கிராமத்தில் / வட்டாரத்திலேயே வைத்திருக்க வேண்டும். தேவைப்படும் அதிகபட்ச கல்வித் தகுதியை முடித்துள்ள பெண்களுக்கு அரசின் அங்கீகரிக்கப்பட்ட பயிற்சி அமைப்புக்களில் தங்கி பயிற்சி பெறுவோர்களுக்கு பயிற்சி அளிக்கத் தேவையான முன் அனுபவமும் தேவையான மூலங்கள்/வளங்களையும் நிறுவனமானது கொண்டிருக்க வேண்டும். எனவே தான் பயிற்சி களங்களை எளிதில் அடையக் கூடியமை, ஊக்கம், அர்ப்பணிப்பு, ஆள்பலம் மற்றும் வளம் ஆகியவற்றைக் கொண்டு அக்கிராமங்களிலும்/பகுதிகளிலும் அத்தகைய பயிற்சிகளை மேற்கொள்ளத் தேவையானவற்றை அவசியம் வைத்திருத்தலும் அதனுடன் அரசால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களில் தங்கிப் பயிற்சி பெறும் உறைவிடப் பயிற்சி அளிப்புகளுக்கான ஏற்பாடுகளைச் செய்யக் கூடிய நிறுவனங்கள் மட்டுமே தகுதியைப் பெற்றவர்களாவர்.

yaஒரு நிறுவனம் இந்தத் திட்டத்தின் கீழ் நிதி உதவி பெற விண்ணப்பிக்கத் தேவையான தகுதிகள்

கீழே தரப்பட்டுள்ளன: -

அ) சங்கங்கள் பதிவு சட்டம், 1860, கீழ் பதிவு செய்யப்பட்ட ஒரு சங்கம்

ஆ) தற்போதைக்கு நடைமுறையிலுள்ள ஏதாவதொரு சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட ஒரு பொது அறக்கட்டளை

இ) நிறுவனங்கள் சட்டம் 1956 பிரிவு 25 இன் கீழ் உரிமம் பெற்ற

ஓரர் அறக்கட்டளை நிறுவனம்

உ. பல்கலைக்கழகங்கள் / உயர்கல்வி நிறுவனங்கள்.

ஊ. பஞ்சாயத்து ராஜ் நிறுவனங்கள்.

**அமலாக்கம்**

## Implementation

8. தலைமைப் பண்பு மேம்பாட்டு பயிற்சி திட்டமானது சிறுபான்மை விவகாரங்கள் அமைச்சகத்தால் நிறுவனங்கள் மூலம் அமல்செய்யப்பட வேண்டும். தேர்ந்தெடுக்கப்பட்ட நிறுவனங்கள் தங்கள் நிறுவனம் மூலம் நேரடியாக திட்டத்தை நிறைவேற்றலாம் அல்லது உள்ளூர் / கிராம/ பிரதேசப் பகுதியில் செயல்படும் சிறிய நிறுவனங்கள் மூலம் செய்யலாம். ஒரு வேளை சிறிய நிறுவனங்கள் தேர்வு செய்யப்பட்டு பல்வேறு கிராமங்களில் / இடங்களில் பயிற்சி அளிப்பைச் செயல்படுத்தினாலும் தேர்ந்தெடுக்கப்பட்ட நிறுவனமே முழுப் பொறுப்பாகும். அச்சிறிய நிறுவனங்கள்கூட இத் திட்டத்தின் பாரா 17 மற்றும் 18 இல் இட்டுள்ளபடி பொருத்தமான முன் தேவையான தகுதிகள் மற்றும் விதிமுறைகள் & நிபந்தனைகளை, நிறைவேற்றியிருக்க வேண்டும். அமைச்சகத்தால் வேலை அளிக்கப்பட்ட நிறுவனம் முறையாகவும் வெற்றிகரமாகவும் திட்டத்தை அமல்படுத்தும் பொறுப்பைக் கொண்டுள்ளது.

**தலைமைப் பண்பு பயிற்சி அளிப்பு பாடத்தொகுதிகள்**
**Leadership development training modules**

9.1 தலைமைப் பண்பு பயிற்சி அளிப்பு பாடத்தொகுதிகள் எவ்வித வேறுபாடின்றி அரசியலமைப்பு மற்றும் பல்வேறு சட்டங்கள் கீழ் வரும் பெண்கள் தொடர்பான விஷயங்கள் மற்றும் உரிமைகளான கல்வி, வேலை, வாழ்வாதாரம் முதலியவற்றை உள்ளடக்க வேண்டும். மேலும் கல்வி, உடல் நலம், சுகாதாரம், ஊட்டச்சத்து, நோய் எதிர்ப்பு, குடுமபக் கட்டுப்பாடு, நோய்த் தடுப்பு, நியாய விலைக் கடைகள், குடிநீர் அளிப்பு,கழிவறை வசதி, வீடு, சுய வேலை வாய்ப்பு, கூலி வேலை, திறன் பயிற்சி வாய்ப்புகள், பெண்களுக்கு எதிரான கொடுமைகள் முதலிய துறைகளில் உள்ள மத்திய அரசு மற்றும் மாநில அரசு திட்டங்கள் மற்றும் அவை சார்ந்த வாய்ப்புக்கள், வசதிகள் மற்றும் சேவைகள் ஆகியனவற்றையும் உள்ளடக்க வேண்டும்.

அது பஞ்சாயத்து ராஜ்ஜில் பெண்களின் பங்கு மற்றும் நகர பராமரிப்பில், பெண்களின் சட்ட உரிமைகள், தகவல் அறியும் உரிமைச் சட்டம், தேசிய கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டம், குடும்பத் தகவல் ஆய்வுகள் மற்றும் வறுமை கோட்டிற்கு கீழான பட்டியல், அலுவலக அமைப்பு மற்றும் இயக்கம், குறைத்தீர்ப்பு மையம் மற்றும் வழிமுறை முதலியவற்றையும் உள்ளடக்க வேண்டும். பயிற்சி உள்ளீடுகளை படிப்படியாகவும் எளிதாகவும் கற்றும் கொள்ளும் விதத்தில் சிறு சிறு அத்தியாயங்களாக அமைக்கப்பட்டிருக்கும் விதத்தில் பயிற்சி அளிப்பு பாடத்தொகுதிகள் கட்டமைக்கப்பட்டிருக்க வேண்டும்.

9.2

பயிற்சி கற்றல்முறை ஒளி-ஒலி காட்சி உதவிகளையும் எடுத்துக்காட்டு ஆய்வுகளையும் எடுத்தாண்டு கற்றலை மேலும் ஆர்வமுடையதாகவும் சுருக்கமானதாகவும் இருக்கச் செய்யும். தலைமைப் பண்புகள் போன்ற நிறுவன திறன், தொடர்பு திறன், சுய மேம்பாடு மற்றும் இணைப்புப் பண்பு, தகவல்தொடர்பு மற்றும் பொதுக் கூட்டங்களில் பேசுதல், ஏற்பாட்டுத் திறன், பேரம் பேசுதல் மற்றும் சிக்கல் தீர்த்தல் முதலியவற்றை பயிற்சியில் ஒருங்கிணைந்த பகுதியாக உருவாக்க வேண்டும். குழு விவாதங்கள் பயிற்சி தொகுதிகளில் சுறுசுறுப்பான பங்கேற்பிற்காக சேர்க்கப்பட வேண்டும். சாத்தியமென்றால், அரசு அதிகாரிகள், வங்கி அதிகாரிகள் முதலியவர்கள் பயிற்சி பெறும் பெண்களிடம் அவர்களின் திட்டங்களைப் பற்றியும் நடவடிக்கைகள் பற்றியும் பேச அழைக்கப்பட வேண்டும்.

9.3

தேவையெழுந்தால் அமைச்சகம் வெளியிடத்து நிபுணர்/ஆலோசகர்/ முகமை

ஆகியோரைக் கொண்டு சிறுபான்மையினப் பெண்களின் தலைமைப் பண்பு மேம்பாட்டிற்கு பொருத்தமான பயிற்சி கையேட்டினை தயாரிக்க வேண்டும்.

9.4

திட்டத்திற்கான அனுமதியளிக்கும் குழு (பாரா 22 இல் விவரங்கள் உள்ளது) வெளியிடத்து நிபுணர்/ ஆலோசகர்/முகமை ஆகியோர் தயாரித்துக் கொடுக்கும் பயிற்சி தொகுப்புகளை பரிந்துரைக்கும்/ஏற்கும் குழுவாகவும் செயலாற்றும்.

மேலும் உறுப்பினர்களாக இத்திட்டத்தின் நோக்கங்களோடு தொடர்புடைய இணைச் செயலாளர் மற்றும் உள்துறை அமைச்சகம், பெண்கள் & குழந்தை மேம்பாடு, கிராமப்புற மேம்பாடு, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு, சுகாதாரம் மற்றும் குடும்ப நலம், உணவு மற்றும் பொது விநியோகம், பள்ளிக் கல்வி&எழுத்தறிவுத் துறை மற்றும் பயிற்சி தொகுப்பால் தொடப்பட்டிருக்கும்திட்டங்களைக் கொண்ட எந்தவொரு இதர அமைச்சகங்கள்/துறைகள் ஆகியவற்றையும் உள்ளடக்கியுள்ளது.

பயிற்சிக்காக பெண்களை அடையாளம் காணுதல் மற்றும் தேர்வு அம்சங்கள் சிறுபான்மைப் பெண்களின் தலைமைப் பண்பினை மேம்படுத்த பயிற்சியினை அளிக்கத் தேர்வு செய்யப்பட்ட நிறுவனமானது ஊக்குவித்தல், அடையாளம் காணுதல் மற்றும் பெண்களை தேர்ந்தெடுத்தல்

ஆகியவற்றை திட்டத்தின் அம்சங்களுக்கு உடன்பட பயிற்சியளிக்கும் பொறுப்புள்ளது.

ஆண்டிற்கான வருமான வரம்பு இருந்தாலும் பெண்ணின் பெற்றோர் அல்லது பாதுகாவலரின் ஆண்டு வருமானம் ஆண்டிற்கு ரூ.2.50 இலட்சமாக அனைத்து வருமான ஆதாரங்களையும் சேர்த்து இருப்பவர்கள் முன்னுரிமைப் பெறுவார்கள்.

அவர்களின் வயது 18 லிருந்து 65 ஆண்டுக்குள் இருக்க வேண்டும்.

**Identification of Women for training and selection criteria:**

**பயிற்சிக்கான பெண்களை அடையாளம் காணுதல் மற்றும் தேர்வு அம்சங்கள்:**

10.நிறுவனமானது சிறுபான்மையினர் பெண்களிடையே தலைமைப்பண்பை வளர்க்கும் திட்டத்தில், அவ்விலக்கு குழுவினரை அடையாளம் கண்டு, ஊக்குவித்து, அவர்களுக்கு இத்திட்டத்திலுள்ள அம்சங்களுக்கு இணங்க பயிற்சி அளிக்க வேண்டும். இலக்குக்குழு பெண்களைத் தேர்ந்தெடுக்கும் போது அவர்களது வருமான வரம்பு ஒரு பொருட்டல்ல. இருப்பினும் பயனாளி/பெற்றோர்/பாதுகாவலரின் அனைத்து ஆதாரங்களில் இருந்து வரும் மொத்த ஆண்டு வருமானம் 2.50 இலட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும். இப்படி இருப்பவர்களுக்கே முன்னுரிமை வழங்கப்படும். மேலும் அவர்கள் 18 முதல் 65 வயதிற்கு உட்பட்டவர்களாக இருத்தல் வேண்டும்.

10.1 இருவகை தலைமைப்பண்பு பயிற்சிகளும், அவற்றிற்கான அம்சங்களும் பின்வருமாறு:

a) **கிராமங்கள்/தொகுதிகளில் தலைமைப்பண்பு பயிற்சி:**

ஒரே தொகுதி/கிராமத்தில் வசிக்கும் பெண்களில் சிறுபான்மை சமூகத்தைச் சார்ந்த பெண்களின் நலனுக்காக பாடுபடும் அர்ப்பணிப்புள்ள,ஊக்குவிக்கப்பட்ட 50 பெண்கள் தேர்ந்தெடுக்கப்படுவர். அவர்கள் அனைவரையும் ஒரே குழுவாகக் கொண்டு பயிற்சி அளிக்கப்படும்.குழுவில் உள்ள 40 பெண்களில் குறைந்தபட்சம் 10%பெண்களாவது பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்களாக இருக்க வேண்டும்.

பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்கள் கிடைக்காத பட்சத்தில் தகுதி ஐந்தாம் வகுப்பாக தளர்த்தப்படும்.

**(b) உறைவிடப் பயிற்சி அளிக்கும் நிறுவனங்களில் தலைமைப் பண்பு பயிற்சி:**

அரசினால் நடத்தப்படும் தங்கிப் பயிற்சி பெறும் நிறுவனங்களில் 50 பெண்கள் பயிற்சியினைப் பெறும் போது ஒரே கிராமம்/பிரதேசத்திலிருந்து அதிகபட்சம் 5 பெண்கள் தேர்வு செய்யப்படலாம். அவர்கள் குறைந்தது பட்டதாரிகளாக இருக்க வேண்டும். பட்டதாரிகளாக இல்லாத பட்சத்தில் பத்தாம் வகுப்பாக தளர்த்தப்படலாம்.

அத்தோடு, அவர்கள் அர்ப்பணித்தல், ஊக்குவித்தல், உடல் தகுதியுடனிருத்தல் மற்றும் சிறுபான்மையினப் பெண்களின் சிறப்பிற்கும் பொதுவாக சமூகத்தின் நலத்திற்கும் வேலை செய்தல் அவசியம்.

Types of training and workshop:

**11.பயிற்சி மற்றும் பயிற்சி பட்டறைகளின் வகைகள்:**

பெரும்பான்மையான பெண்கள் குறிப்பாக கிராமப்புறங்களில் இருந்து வரும் பெண்கள் தங்கள் வீட்டின் அருகிலேயே இருக்க விரும்புவர்.அவர்களால் வெகுதூரம் வர இயலாது.மேலும் சில படித்த இளம் பெண்கள் பொதுவாக இதர பெண்களுக்கு உதவ விருப்பப்படுவர்.குறிப்பாக அவரவர் சமூகத்தைச் சேர்ந்த பெண்களின் முன்னேற்றத்திற்கு உதவுவர்.இத்தகைய பயிற்சி இரண்டு வகைகளில் அளிக்கப்படுகின்றது.

Leadership development training in the village/locality:

**(a) கிராமம்/தொகுதிகளில் தலைமைப் பண்பை வளர்க்கும் பயிற்சி:**

கிராமம்/தொகுதிகளில் ஏற்கனவே உள்ள வசதிகளைக் கொண்டும், கூடத்தை வாடகைக்கு எடுத்தும் அல்லது தற்காலிகக் கூடத்தை அமைத்தும் பயிற்சி வகுப்புகள் நடத்தப்படுகின்றன. பயிற்சி வகுப்பானது 6 நாட்களுக்கு ,மூன்று தவணைகளுக்குக் குறைவில்லாமல் மூன்று மாதங்களுக்குள் நடத்தி முடிக்கப்படும். பயிற்சி தேதியை நிர்ணயிக்கும் பொழுது மத/திருவிழா நாட்கள் தவிர்க்கப்பட வேண்டும்.மேலும்

சிறுபான்மையினப் பெண்களின் தலைமைப் பண்பை மேம்படுத்துவதற்காக நிறுவனத்தின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டு பயிற்சி அளிக்கும் பெண்கள், இத்திட்டத்தின் அம்சங்களுக்கு உட்பட்வர்களாக இருத்தல் வேண்டும். அந்தப் பகுதியின் உள்ளூர் மொழியில் அச்சடிக்கப்பட்ட பயிற்சி புத்தகங்களை நிறுவனங்கள் அளிக்க வேண்டும். இப்பயிற்சியினை ஊக்குவிக்க பயிற்சிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட பெண்களுக்கு ஏற்படும் வருமானம்/கூலி இழப்பினை பகுதியாக ஈடுகட்டுவதற்கு படி/உதவித் தொகை வழங்கப்படுதல் வேண்டும். மேலும் மதிய உணவும் அவர்களது குழந்தைகளுக்குத் தேவையான இதர ஏற்பாடுகளையும் பயிற்சி வகுப்புகள் நடைபெறும் நாட்களுக்கு அளிக்க வேண்டும்.தன்னார்வ தொண்டு நிறுவனங்களால் ஏற்பாடு செய்யப்படும்  பயிற்சியாளர்களில் குறைந்தது மூன்றில் இரண்டு பங்கு பேர் பெண்களாக இருக்க வேண்டும். மேலும் அவர்கள் உள்ளூர் மொழியில் உள்ளீடுகளை இந்தத் திட்டத்தின் பத்தி  20.3 ல் குறிப்பிடப்பட்ட தலைப்புகளில் வழங்க வேண்டும்.

**Leadership training in residential training institutes:**

**(b) உறைவிடப் பயிற்சி அளிக்கும் நிறுவனங்களில் தலைமைப் பண்புப் பயிற்சி:**

தேர்ந்தெடுக்கப்பட்ட தகுதியுள்ள பெண்கள   மத்திய/ மாநில/யூனியன் பிரதேசங்களால் நடத்தப்படும் பயிற்சி நிறுவனங்களில் தலைமைப்பண்பு பயிற்சி அளிக்கப்படுவர். பயிற்சியானது தொகுதிகளாகப் பிரிக்கப்பட்டு அமைச்சகத்தில் உள்ள குழுவால் அனுமதிக்கப்பட வேண்டும். பயிற்சியானது இரண்டு பருவங்களாக , ஒரு பருவத்திற்கு மூன்று நாட்கள் வீதம் ( மொத்தம் 6 நாட்கள்)) மூன்று மாதங்களுக்குள் நடத்தி முடிக்கப்பட வேண்டும். மத/ பண்டிகை நாட்களில் பயிற்சி அளித்தலைத் தவிர்க்க வேண்டும். பயிற்சிக்கான முழுக் கட்டணம், பயிற்சிக்கான பொருட்கள், உணவு,தங்குதல், தேநீர், பயண செலவுகள் அனைத்தையும் திட்டத்திலேயே உள்ளடக்க வேண்டும். பயிற்சி காலத்தில், பயிற்சி பெறுபவர்களுக்கு படி/உதவித்தொகை வழங்கப்படும். திட்டத்தின் விதி முறைகளுக்கு உட்பட்டு பயிற்சி பெறத் தகுதியான பெண்களைத் தேர்வு செய்தல் நிறுவனத்தின் பொறுப்பாகும்.தேவைப்பட்டால் பயிற்சி அளிக்கும் இதர நிறுவனங்களைக் கலந்து

ஆலோசித்து அவர்களின் வழிகாட்டுதலின்படி பெண்களைத் தேர்வு செய்யலாம். இத்திட்டத்தின் பத்தி 20.3 மற்றும் 9- ஐக் கருத்தில் கொண்டு அமைச்சகக் குழுவால் பரிந்துரைக்கப்பட்ட பாடத்தொகுதிகளைப் பயிற்சியில் உள்ளடக்க வேண்டும்.

11.1 இத்திட்டத்தில் பத்தி 5-ல் குறிப்பிடப்பட்டுள்ள குறிக்கோள்களை அடைய தலைமைப்பண்பு மேம்பட்டு பயிற்சி பெற்ற பெண்கள் செயலாற்ற வேண்டும்.பயிற்சிக்குப் பின்பும் பெண்களின் நடவடிக்கைகளுக்கு ஆதரவும் ஊக்கமும் தேவை.இதனை ஓர் ஆண்டு காலத்திற்கு அளிக்க வேண்டும்.இத்திட்டத்தின் ஆரம்ப காலத்தில் தாங்கள் வசிக்கும் கிராம/பகுதிகளில் பெண்களால் அடையாளம் காணப்பட்டிருந்த அடிப்படை உட்கட்டமைப்பு மற்றும் சேவைகள் சார்ந்த குறைகளை நிவர்த்தி செய்ய பெண்கள் ஒரு குழுவாக முனைப்புடன் செயல்பட்டு கிராம/வட்டார/மாவட்ட/மாநில அதிகாரிகளை அணுகி முன்னேற்றம் அடையச் செய்கிறார்கள் என்பதை இதன் மூலம் உறுதி செய்யமுடியும். பயிற்சிக்குப் பிந்தைய இச்சேவையை அளிக்க நியமிக்கப்படும் அலுவலர்கள் கிராமம் மற்றும் பகுதிகளைப் பார்வையிடுதல்,அவர்களின் கடமைகளை முறையாகச் செய்தல், அதன் நடவடிக்கைகளை தெரியப்படுத்துதல் முதலியவற்றை நிறுவனமானது உறுதி செய்ய வேண்டும்.

**Workshop**

**11.2 பணிப்பட்டறை:**

நிறுவனமானது மாவட்ட ஆட்சியர்/துணை ஆணையர்/உட்பிரிவு அதிகாரி/வட்டார மேம்பாட்டு அதிகாரிகளுடன் இணைந்து குறைந்தது அரைநாள் பணிப்பட்டறையை நடத்த வேண்டும்.இத்திட்டத்தின் கீழ் பெண்களுக்கு அதிகாரமளித்தல் தொடர்பான நிகழ்ச்சிகளை மாவட்ட மற்றும் உட்பிரிவு/வட்டர அளவில் அரசாங்க அலுவலகங்கள்,வங்கிகள்,கிராம சபை அமைப்புகள் முதலியன மேற்கொள்கின்றன. இவைகளை முடுக்குவிக்க இப்பணிப்பட்டறைகள் உதவும். மேலும் பல்வேறு பெண்களிடம் இருந்து வரும் கோரிக்கைகள் மற்றும் குறைகளை நிவர்த்தி செய்வதற்கான தீர்வு நடவடிக்கைகள் மற்றும் அவற்றை நடைமுறைப்படுத்துவதில் இவைகளுக்கு உள்ள பொறுப்புணர்வும் விளக்கப்படும். இப்பயிற்சி திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட கிராமம்/பகுதியுடன் தொடர்புடைய

மாவட்ட/உட்பிரிவு/வட்டாரத்தில் பணிப்பட்டறையை நடத்த வேண்டும்.

நிறுவனத்தால் நடத்தப்பட்ட பயிற்சிகளின் ஆடியோ விஷுவல் க்ளிப் (ஒலி-ஒளியுடன் கூடிய ஆதாரங்கள்) பணிப்பட்டறையின் போது காண்பிக்கப்பட வேண்டும்.

Implementation expenditure and agency fees/charges for NGO for the training courses:

**அரசு சாரா நிறுவனங்களின் பயிற்சி வகுப்புகளுக்கான முகமைக் கட்டணம் மற்றும் செயல்பாட்டுச் செலவினங்கள்:**

12. நிறுவனங்களின் செயல்பாட்டுச் செலவுகளில் தகுதியுடைய பெண்களை ஊக்கப்படுத்துதல், கண்டறிதல்,தேர்ந்தெடுத்தல்,பயிற்சி வகுப்புகள்,போக்குவரத்து,ஊக்குவிப்பவர்களுக்கு வெகுமானம்,பயிற்சிக்குப் பின் ஊக்கப்படுத்துதல்,தொடர்ச்சியாக கண்காணித்தல் மற்றும் அவைகளைத் தெரிவித்தல் போன்றவைகள் அனைத்தும் அடங்கும்.

(a) **Nurturing and hand holding:**

**பயிற்சிக்குப் பிந்தைய ஊக்கமும் ஆதரவும்:**

நிறுவனமானது தலைமைப்பண்பு மேம்பட்டு பயிற்சியின் தொடக்கத்தில் இருந்து ஒரு வருடத்திற்கு மிகாமல் பயிற்சி பெற்ற பெண்களுக்கு,பயிற்சிக்குப் பிறகு இச்சேவையை அளிக்கிறது.திட்ட காலத்தின் போது மாதத்திற்கு ஒரு முறையாவது நிறுவனத்தைச் சார்ந்த அலுவலர்கள் கிராமம்/இடத்திற்கு சென்று பயிற்சியளிக்கப்பட்ட பெண்களுக்கு உதவ வேண்டும்.பத்தி 5,9 மற்றும் 20.3 களில் உள்ளதைப் போன்று அவர்களைச் சந்தித்து, அவர்களது கவலை மற்றும் குறைகளைக் கண்டறிந்து அவற்றிற்கான தீர்வுகளைக் காண்பது ஆகும்.இது திட்டத்தின் வெற்றியை உறுதி செய்வதற்கு மிக முக்கியம்.

(b) **Concurrent monitoring and reporting:**

தொடர்ந்து கண்காணித்தல் மற்றும் தெரிவித்தல்:

தேவைப்படும் இடங்களில் தக்க நடவடிக்கைகளை எடுத்து சரியான முறையில் திட்டத்தைச் செயல்படுத்த நிறுவனமானது தொடர்ந்து கண்காணிப்புப் பணியில்

ஈடுபட வேண்டும். நிறுவனமானது மாதத்திற்கு ஒரு முறையோ/மூன்று மாதங்களுக்கு ஒரு முறையோ நடவடிக்கை சான்றுகள் மற்றும் திட்ட முடிவு சான்று போன்றவைகளை அமைச்சகத்திற்கு வரையறுக்கப்பட்ட அமைப்பில் சமர்ப்பிக்க வேண்டும்.

---

12.1 Agency fees/charges:

**12.1 முகமைக் கட்டணங்கள்/செலவுகள்:**

குறித்த நேரத்திலும்,முறையாகவும்,வெற்றிகரமாகவும் திட்டத்தைச் செயல்படுத்துவதற்குத் தேவையான சேவைகளை பெற்றிட முகமைகளுக்கு நிறுவனமானது கட்டணங்களை செலுத்தலாம்.அக்கட்டண விகிதங்கள் இத்திட்டத்தின் பத்தி 14-ல் கொடுக்கப்பட்டுள்ளது.

Administrative expenditure for Ministry:
**13. அமைச்சகத்தின் மேலாண்மை செலவினங்கள்:**

நிர்வாகச் செலவுகளை எதிர்கொள்ள இத்திட்டத்திற்கு ஒதுக்கப்படும் ஓர் ஆண்டிற்க்கான நிதியில் 1.5% வரை பயன்படுத்திக் கொள்ள அமைச்சகம் அனுமதியளிக்கின்றது.கணினிகள் மற்றும் அவை சார்ந்தவைகள்,டிஜிட்டல் கேமரா,அறைகலன்(ஃபர்னீச்சர்),எழுதுபொருட்கள் மற்றும் மென்பொருட்கள் ஆகியவற்றை வாங்குதல்,தகவல்களை உட்செலுத்துதல்,அதை ஆராய்வதில் பரிந்துரைகள் சார்ந்த செயல்பாடுகள்,அறிக்கைகளைக் கண்காணித்தல்,மதிப்பீடு செய்தல்,குறிப்பெடுத்தல்,பவர் பாய்ன்ட் பிரசன்டேஷன்(PPT) மற்றும் அறிக்கைகள் தயாரித்தல்,அமைச்சகத்தின் இணையதளத்தில் தெரியப்படுத்த வேண்டிய தகவல்களைத் தயார் செய்தல்,அலுவலக நேரங்களில் சந்தேகங்களை நிவர்த்தி செய்வதற்கான தொலைபேசி வழி சேவைகள்/இச்செயலை மூன்றாம் நபரின் மூலம் செயல்படுத்துதல்,விளம்பர வெளியீடு, கற்பித்தல் மற்றும் பயிற்சியளித்தல் தொடர்பான ஆலோசனைக் கட்டணங்கள் முதலியன நிர்வாகச் செலவுகளில் அடங்கும்.

Rates:

## 14.கட்டண செலவினத் தொகை:

இத்திட்டத்தைச் செயல்முறைப்படுத்த நிறுவனங்களுக்கு நிதியுதவி அளிக்கப்படுகிறது.வகை வாரியாக செலவின விவரங்கள் கீழே உள்ள அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளது.இது பயிற்சியளிக்கப்படும் இடம்,பயிற்சியளிக்கும் நிறுவனத்தின் கட்டணம்,தங்கும் கட்டணம், போன்றவைகளைப் பொருத்து மாறுபடும்.ஒவ்வொரு வகை பயிற்சிக்கும் ஆகும் மொத்தத் தொகை குறிப்பிடப்பட்டுள்ளது.அது 50 பெண்களைக் கொண்ட ஒரு குழுவிற்கு ஆகும் அதிகபட்ச தொகையாகும்.படி/உதவித்தொகைத் தவிர இதர வகை வாரியான செலவினங்களை அவற்றுக்குள் மாற்றம் செய்து கொள்ளலாம்.ஆனால் அவ்வகை மாற்றமானது அனுமதிக்கப்பட்ட திட்டத்தொகையை மீறக்கூடாது.பயிற்சி,பயணங்கள் முதலியவற்றுக்கான எதிர்பார்க்கப்படும் செலவினங்கள் சார்ந்த ஆவணங்களை விண்ணப்பிக்கும் போதே சமர்ப்பிக்க வேண்டும்.கட்டண செலவினத் தொகை விவரங்கள் கீழே உள்ள அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளது.

### DETAILS OF RATES FOR LEADERSHIP DEVELOPMENT TRAINING FOR WOMEN FROM MINORITY COMMUNITIES

### சிறுபான்மையினப் பெண்களிடையே தலைமைப் பண்பினை மேம்படுத்தும் பயிற்சிக்காக ஆகும் செலவுகளின் விவரம்

| வரிசை எண் | தலைமைப்பண்பு மேம்பாட்டுப் பயிற்சி திட்டத்திற்கான வகைவாரியான செலவினங்கள் | நபர்களின் எண்ணிக்கை | ஒரு நாளைக்கான குறிப்பிடப்படும் தொகை (ரூபாயில்) | கால அளவு( நாள்/ நேரம்) | மொத்த தொகை (ரூபாயில்) |
|---|---|---|---|---|---|
| 1 | i)கிராமம்/தொகுதிகளில் தலைமைப் பண்பை வளர்க்கும் பயிற்சி | | | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | (a)பயிற்சியளிக்கும் நிபுணர்களுக்கான கட்டணம்/ஊக்கத்தொகை | **2** | **500** | **6** | **600** |
| | (b)பயிற்சியளிக்கும் நிபுணர்களுக்கான (வந்து போக) போக்குவரத்து செலவுகள் | **2** | **2500** | **3** | **15000** |
| | (c)பயிற்சியளிக்கும் நிபுணர்களுக்கான தங்கும் செலவுகள் | **2** | **250** | **6** | **3000** |
| | (d) கூடம்,அறைகலன்களின் வாடகை மற்றும் குழந்தைகள் பராமரிப்பதற்கு ஆகும் செலவுகள் | **50** | **750** | **6** | **4500** |
| | (e) பயிற்சி பெறும் பெண்களுக்கான ஒரு வேளை உணவிற்கு ஆகும் செலவு | **50** | **50** | **6** | **15000** |
| | (f) ஆடியோ விஷுவல் கருவிகள் , பயிற்சி அளித்தலுக்கான உபகரணங்கள் வாங்குதல்/வாடகை செலவுகள் மற்றும் பலதர செயல்பாடுகளின் ஆடியோ விஷுவல் க்ளிப்ஸை எடுத்தலுக்கான செலவுகள் | **50** | **2000** | **6** | **12000** |
| | (g) பயிற்சி மூலங்கள் ,உள்ளூர் மொழிகளுக்கான புத்தகம் மற்றும் எழுதுபொருள்கள் பட்டுவாடா செய்வதற்காக ஆகும் செலவுகள் | **50** | **200** | **3** | **10000** |
| | (h) பெண்களுக்கான படி/ஊக்கத்தொகை | **50** | **50** | **6** | **15000** |
| | **உட் கூட்டுத்தொகை**<br><br>**(ii) நிறுவனத்திற்கு அனுமதிக்கப்பட்ட செயல்பாட்டு செலவினங்கள்** | | | | **80500** |
| | (a) தகுதியுடைய பெண்களை | **50** | **50** | **1** | **2500** |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | ஊக்கப்படுத்துதல், கண்டறிதல் மற்றும் தேர்ந்தெடுத்தலுக்கு ஆகும் செலவு | | | | |
| | (b) பயிற்சிக்குப் பிந்தைய ஊக்கமும் ஆதரவும் அளித்தல், தொடர்ந்து கண்காணித்தல் மற்றும் தெரிவித்தல் | **50** | **400** | **12** | **4800** |
| | **உட் கூட்டுத்தொகை** | | | 25000 | **7300** |
| | **(iii) முகமைக் கட்டணங்கள்** | | | | 25000 |
| | **உட் கூட்டுத்தொகை** | | | | **25000** |
| | **மொத்த கூட்டுத்தொகை** | | | | **112800** |
| **2** | **(i)தங்கிப் பயிலும் தலைமை மேம்பாட்டு பயிற்சி** | | | | |
| | **(a)**கட்டணம்,தங்கும் செலவு,உணவு( உள்ளபடியான செலவு திருப்பியளிக்கப்படும்) | **50** | **1000** | **6** | **300000** |
| | (b) தொடர்புடைய அரசின் சட்டங்கள்,திட்டங்களின் நகல்கள்,பயிற்சி மூலங்கள்,தகவல் சிற்றேடுகள்,எழுதுபொருட்கள். | **50** | **600** | **1** | **30000** |
| | (c) குறிப்பிடப்படும் போக்குவரத்து செலவுகள் ( உள்ளபடியான செலவு திருப்பியளிக்கப்படும்) | **50** | **2500** | **2** | **250000** |
| | (d) பெண்களுக்கான படி/ஊக்கத்தொகை | **50** | **100** | **6** | **30000** |
| | **உட் கூட்டுத்தொகை** | | | | **610000** |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | **(ii) நிறுவனத்திற்கு அனுமதிக்கப்பட்ட செயல்பாட்டு செலவினங்கள்** | | | | |
| | (a) தகுதியுடைய பெண்களை ஊக்கப்படுத்துதல், கண்டறிதல் மற்றும் தேர்ந்தெடுத்தலுக்கு ஆகும் செலவு | **50** | **50** | **1** | **2500** |
| | (b) பயிற்சிக்குப் பிந்தைய ஊக்கமும் ஆதரவும் அளித்தல், தொடர்ந்து கண்காணித்தல் மற்றும் தெரிவித்தல் | **50** | **400** | **12** | **4800** |
| | **உட் கூட்டுத்தொகை** | | | **25000** | **7300** |
| | **(iii) முகமைக் கட்டணங்கள்** | | | | 25000 |
| | **உட் கூட்டுத்தொகை** | | | | **25000** |
| | **மொத்த கூட்டுத்தொகை** | | | | **642300** |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | **பணிப்ப** | **ஒரு** | **பெண்க** | **மொத்தத்** |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | ட்டறைகளின் எண்ணிக்கை | பணிப்பட்டறைக்கான தொகை(ரூபாயில்) | ளின் எண்ணிக்கை | தொகை (ரூபாயில்) |
| 3 | நிறுவனமானது மாவட்ட ஆட்சியர்/துணை ஆணையர்/உட்பிரிவு அதிகாரி/வட்டார மேம்பாட்டு அதிகாரிகளுடன் இணைந்து நிறுவனத்தால் நடத்தப்பட்ட பயிற்சிகளின் ஆடியோ விஷுவல் க்ளிப்களின் (ஒலி-ஒளியுடன் கூடிய ஆதாரங்கள்) உதவியுடன் அரைநாள் பணிப்பட்டறையை நடத்தி மாவட்ட மற்றும் உட்பிரிவு/வட்டர அளவில் அரசாங்க அலுவலகங்கள்,வங்கிகள்,கிராம சபை அமைப்புகளை முடுக்குவித்தல் முதலியன | மாவட்டத்திற்கு ஒன்று வீதம் | **15000** | | **15000** |
| **ஆண்டு** | **பயிற்சியின் வகைகள்** | **பயிற்சி/ பணிப்பட்டறைக்கான செலவுகள் (ரூபாயில்)** | **பயிற்சியளிக்கப்படும் குழுக்களின் எண்ணிக்கை** | **பயிற்சியளிக்கப்படும் பெண்களின் எண்ணிக்கை** | **தேவையான நிதி(ரூபாயில்)** |
| **2009-10** | கிராம/பகுதிகளில் பயிற்சி | **112800** | **650** | **32500** | **73320000** |
| | நிறுவனங்களில் உறைவிடப் பயிற்சி | **642300** | **9** | **450** | **5780700** |
| | **உட் கூட்டுத்தொகை** | | | | **79100700** |
| | அலுவலர்களுக்கான பணிப்பட்டறை | **15000** | **8** | | **120000** |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | | |
| | **மொத்த கூட்டுத்தொகை** | | | | **79220700** |
| | அமைச்சகத்திற்கான நிர்வாகச் செலவுகள் @1.5% | | | | **1188311** |
| | **2009-10 ற்கான மொத்த கூட்டுத்தொகை** | | **659** | **32950** | **80409011** |
| **2010-11** | | | | | |
| | கிராம/பகுதிகளில் பயிற்சி | **112800** | **1100** | **55000** | **124080000** |
| | நிறுவனங்களில் உறைவிடப் பயிற்சி | **642300** | **37** | **1850** | **23765100** |
| | **உட் கூட்டுத்தொகை** | | | | **147845100** |
| | அலுவலர்களுக்கான பணிப்பட்டறை | **15000** | **10** | | **150000** |
| | **மொத்த கூட்டுத்தொகை** | | | | **147995100** |
| | அமைச்சகத்திற்கான நிர்வாகச் செலவுகள் @1.5% | | | | **2219927** |
| | **2010-11 ற்கான மொத்த கூட்டுத்தொகை** | | **1245** | **56850** | **150215027** |
| **2011-12** | | | | | |
| | கிராம/பகுதிகளில் பயிற்சி | **112800** | **1800** | **90000** | **203040000** |
| | நிறுவனங்களில் உறைவிடப் பயிற்சி | **642300** | **60** | **3000** | **38538000** |
| | **உட் கூட்டுத்தொகை** | | | | **241578000** |
| | அலுவலர்களுக்கான பணிப்பட்டறை | **15000** | **80** | | **4831560** |
| | **மொத்த கூட்டுத்தொகை** | | | | **246409560** |
| | அமைச்சகத்திற்கான நிர்வாகச் செலவுகள் @1.5% | | | | **3696143** |
| | **2011-12 ற்கான மொத்த கூட்டுத்தொகை** | | **1860** | **93000** | **250105703** |

| 11th Plan | | | | | |
|---|---|---|---|---|---|
| | கிராம/பகுதிகளில் பயிற்சி | | **3550** | **177500** | **400440000** |
| | நிறுவனங்களில் உறைவிடப் பயிற்சி | | **106** | **5300** | **68083800** |
| | அலுவலர்களுக்கான பணிப்பட்டறை | | **98** | | **5101560** |
| | அமைச்சகத்திற்கான நிர்வாகச் செலவுகள் @1.5% | | | | **7104380** |
| | 11வது ஐந்தாண்டுத்திட்டத்தில் **மொத்த கூட்டுத்தொகை** | | **3656** | **182800** | **480729740** |

**Financial and physical targets**

**நிதி மற்றும் எண்ணிக்கை இலக்குகள்:**

15. இத்திட்டமானது நாடு முழுவதும் செயல்முறைப்படுத்தப்படும். குறிப்பாக மாவட்டங்கள், ஒன்றியம் மற்றும் நகரங்களில் சிறுபான்மையினர் மக்கட்தொகை கணிசமாக உள்ள பகுதிகளில் சிறப்பு கவனத்துடன் செயல்படுத்தப்படும்.2009-10 முதல் 2011-12 வரை உள்ள மொத்த பெண்களில் 1,82,800 பெண்கள் பரிந்துரை செய்யப்படுகிறார்கள்.2009-10 -ம் ஆண்டில் 32,950 இலக்கு குழு பெண்களுக்கு 8

கோடி மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.மூன்றாண்டு காலத்திற்கு,பதினோறாவது திட்டத்தின் கீழ் இத்திட்டதிற்கு தேவையான தொகை 48 கோடியாக மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.வருடாந்திர வாரியான நிதி மற்றும் எண்ணிக்கை விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| | **பயிற்சியளிக்கப்படும் குழுக்களின் எண்ணிக்கை** | **பயிற்சியளிக்கப்படும் பெண்களின் எண்ணிக்கை** | **தேவையான நிதி(ரூபாயில்)** |
|---|---|---|---|
| **2009-10-ல் மொத்தம்** | 659 | 32950 | 80409011 |
| **2010-11-ல் மொத்தம்** | 1245 | 65850 | 150215027 |
| **2011-12-ல் மொத்தம்** | 1860 | 93000 | 250105703 |
| **11-வது ஐந்தாண்டுத்திட்டம் திட்டத்தில் மொத்தம்** | 3764 | 182800 | 480729740 |

## Advertisement:

**விளம்பரம்**

16. சிறுபான்மையினர் விவகாரங்களுக்கான அமைச்சகத்தால் விளம்பரம் தேசிய செய்தித்தாள்களில் வெளியிடப்படும்.மேலும் இதில் பங்கேற்பதற்கான விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. பங்கேற்க விரும்பும் நிறுவனங்கள் அதற்கான முன் தகுதிகளை /அம்சங்களைப் பூர்த்தி செய்ய வேண்டும்.

## Pre-qualification criteria for NGOs/Organisations/Institutions

**தொண்டு நிறுவனங்கள்/அமைப்புகள்/நிறுவனங்களுக்கான முன்தகுதி/அம்சங்கள்:**

17. கடுமையான முன் தகுதி தேர்வுகள் மூலம் நிறுவனங்கள் தேர்வுப்பட்டியலில் சேர்க்கப்படுகின்றனர்.பெருமளவில் ஊக்குவித்தல், அர்ப்பணிப்பு மற்றும் பெண்கள் நலனில் அக்கறை குறிப்பாக சிறுபான்மையினர் பெண்களின் நலனில் ஈடுபாடு கொண்ட தேசிய மற்றும் பிராந்திய தெண்டு நிறுவனங்கள்/அமைப்புகள்/நிறுவனங்கள் தேர்வு செய்யப்படுகின்றனர்.மேலும் அவைகள் திட்டத்தை கடைமட்ட நிலையிலும் செயல்முறைபடுத்தத் தேவையான மனிதவளம், நிதி மற்றும் கட்டமைப்புகளைக் கொண்டதாக இருத்தல் வேண்டும். நிறுவனங்களுக்கான முன்தகுதி அம்சங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.அவை அரசின் விதிமுறைகள்/அரசின் தொடர்புடைய அறிவுரைகளுக்கு ஏற்ப மாற்றி அமைக்கப்படும். நிறுவனங்கள் அவர்களது ஆதரவு ஆவணங்களையும் சமர்ப்பிக்க வேண்டும். இதன் நோக்கமானது நேர்மையான, நம்பகத்தன்மையும் மற்றும் அங்கீகாரம் கொண்ட நிறுவனத்தைத் தேர்வு செய்வதாகும்.

(a) அமைப்பு முறையாக பதிவு செய்திருக்க வேண்டும் மற்றும் குறைந்தது ஐந்து ஆண்டுகள் இயக்கத்தில் இருந்திருக்க வேண்டும்.

(b) நிறுவனமானது தற்பொழுது இயங்கிவரும் அமைப்பாக இருத்தல் வேண்டும்.மேலும் அவ்வமைப்பானது பகுதி/வட்டாரம்/இடம் போன்றவைகளில் ஏற்கனவே சில திட்டங்களை அமல்படுத்தியிருக்க வேண்டும்.இதனால் இத்திட்டத்தின்க் கீழ அமல்படுத்த இலகுவாக இருக்கும்.இத்தகைய அமைப்பிற்கு முன்னுரிமை வழங்கப்படும்.

(c) நிறுவனமானது பெண்களுக்கான பயிற்சி திட்டத்தை ஒரு முறையாவது ஏற்று நடத்தியிருக்க வேண்டும்.பெண்களுக்கு ஏற்படும் பிரச்சனைகளைத் தீர்ப்பது குறிப்பாக சிறுபான்மையினர் பெண்களின் பிரச்சனைகளை தீர்ப்பதில் அனுபவம் கொண்ட அமைப்புகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

(d)இருதரப்பு,பலதரப்பு நிதி முகமைகள்/அமைப்புகள் அல்லது ஐநா நிதியுதவி திட்டங்கள் போன்ற அரசு திட்டங்களை அமல்படுத்துவதில் அனுபவம் கொண்ட அமைப்புகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

(e) நிறுவனமானது கடந்த மூன்று ஆண்டுகளில் குறைந்தபட்சம் ஒரு கோடிக்கு ஆண்டு வரவு செலவைக் கொண்டதாகவும் இருக்க வேண்டும்.மேலும் நஷ்டம் அடையாமல் இருந்திருக்க வேண்டும்.

(f) நிறுவனமானது கடந்த மூன்று ஆண்டுகளுக்கான ஆண்டு கணக்கினையும், ஆண்டு அறிக்கைகளையும் முடித்திருக்கவேண்டும்.கணக்குகள் முறையாக தணிக்கை செய்யப்பட்டு இருக்க வேண்டும்.

(g) சட்டப்படியான அனைத்து கூட்டங்களும் நிறுவனத்தால் நடத்தப்பட்டு இருத்தல் வேண்டும்.

(h) மாநில/யூனியன் பிரதேசங்கள் /ஒரு மாநிலத்திற்குட்பட்ட எந்த ஒரு பகுதிகளிலும் தற்போது இயக்கத்தில் உள்ள நிறுவனத்தின் அமைப்புகளைப் பற்றிய விவரம் இணைக்கப்பட்டிருக்க வேண்டும்.

(i) நிறுவனமும் அரசினால் நிர்வகிக்கப்படும் பயிற்சி அமைப்புகளும் இணைந்து செயலாற்றிய முழு விவரங்கள் வைக்கப்பட வேண்டும்.

(j)நிறுவனமானது பயிற்சி வகுப்புகளை நடத்தி இருக்கவேண்டும். அவை பற்றிய விவரங்கள் இணைக்கப்பட்டிருக்க வேண்டும்.

(k) அமைப்பானது பெண்களுக்கான தலைமைபண்பு மேம்படுத்தும் பயிற்சியில் சிறந்த நிபுணத்துவம் வாய்ந்த பயிற்சியாளர்களைக் கொண்டிருக்க வேண்டும்.மேலும் அவர்கள் பெண்களை ஊக்குவிப்பதிலும்,உடன்செயல்படுவதிலும் பயிற்சி பெற்றவர்களாக இருத்தல் அவசியம்.

(l) நிறுவனத்திலிருந்து இத்திட்டத்திற்காக தேர்ந்தெடுக்கப்பட்டோரில் மூன்றில் இரண்டு பங்கினர் தகுதியான/பொருத்தமான அனுபவமிக்க பெண்களாக இருக்க வேண்டும்.

(m) நிறுவனமானது தனது நற்பெயரையும்,செயற்தகுதியையும்,இத்தகைய திட்டங்களை நடத்தியதற்கான ஆதார ஆவணங்கள் மூலம் கொடுக்க வேண்டும்.

(n) நிறுவனமானது மத அல்லது அரசியல் நிறுவனமாகவோ அல்லது அவை போன்ற அமைப்புகளுடன் இணைந்தோ இருக்கக் கூடாது.

(o) நிறுவனமானது அரசுத்துறை/முகமையால் கருப்புப் பட்டியலில் சேர்க்கப்பட்டிருக்கக் கூடாது.மேலும் நிறுவனமோ அல்லது அதில் பணிபுரியும் ஊழியர்களோ எந்த குற்றவியல் அல்லது குடிமையியல் வழக்குகளிலும் ஈடுபட்டிருக்கக் கூடாது.

**Terms and conditions**
## விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள்

18. நிதி அளிப்பதற்கான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் பின்வருமாறு. இவை சூழ்நிலையைப் பொறுத்து அமைச்சகத்தால் மாற்றப்படும்:-

(a)

நிறுவனத்தின் இணைய தளத்தில் அவர்களின் நிறுவனம் பற்றிய விவரங்கள்,தலைமை அலுவலகம், கள அலுவலகங்கள், தொலைபேசி எண்கள்,பணியாளர்கள், கடந்த செயல்பாடுகள் மற்றும் நடவடிக்கைகள் பற்றிய விவரங்கள் ,இத்திட்டத்தின் கீழ் பயிற்சி கொடுக்கப்பட்ட பெண்களின் பெயர் , முகவரி, மற்றும் பெண்களின் தொலைபேசி எண் முதலியவற்றை உள்ளடக்கிய முழு விவரங்கள் , பயிற்சியின் போதும் பயிற்சிக்குப் பிறகும் அவர்கள் தங்களது வாழ்க்கைத்தரத்தினை மேம்படுத்திக் கொள்ள மேற்கொண்ட நடவடிக்கைகள் உள்ளிட்டவற்றை தெரியப்படுத்த வேண்டும். மேலும் இத்தகவல்களை அமைச்சகத்திற்கு அளிக்க வேண்டும்.

(b) நிறுவனமானது உறுதிமொழி பத்திரம் ஒன்றை, திட்டத்தை உண்மையாக அமலாக்கும் முறையான அதிகாரியின் பெயரில் எடுக்க வேண்டும்.

சிறுபான்மையினர் நல அமைச்சகத்தினால் விதிக்கப்பட்ட திட்டத்தின் விதிகள் மற்றும் நிபந்தனைகளை ஒப்புக் கொண்டு அத்தோடு இரு பிணையங்களுடன் கூடிய பத்திரம் ஒன்றையும் இணைக்க வேண்டும்.

மேலும் வழங்கப்பட்ட கொடைக்கு கணக்குகளைச் சமர்பிக்கும் பொறுப்பையும் ஏற்றுக் கொள்ள வேண்டும். கொடை அளிக்கப்பட்ட அமைப்பு, ஒரு அரசு நடத்தும் நிறுவனம் / பல்கலைக்கழகமாக இருந்தாலோ,1860 ஆம் ஆண்டு சங்கங்கள் பதிவுச்

சட்டத்தின் கீழ் சங்கம் பதிவு செய்யப்பட்டிருந்தாலோ அல்லது கூட்டுறவு சங்கமாக இருந்தாலோ அல்லது அமைச்சகத்தினால் அவ்வாறான உறுதிமொழிகள் கட்டாயமென்று கருதப்படாத நிறுவனமாக இருந்தால் இரு பிணையங்கள் தேவையில்லை.

ccc(c)

நிறுவனமானது சிறுபான்மையினர் விவகார அமைச்சகத்தின் நிதியுதவிக்கு தனியான கணக்கு ஒன்றை பராமரிக்க வேண்டும். மேலும் அதை அமைச்சகம் ஆய்விற்குக் கேட்கும்போது கிடைக்கச் செய்ய வேண்டும்.

d(d)

நிறுவனமானது நிதியுதவியை குறிப்பிட்ட நோக்கங்களுக்காக மட்டுமே

பயன்படுத்த வேண்டும். நிறுவனமானது இந்தக் கட்டளைக்கு மாறாகநடந்து கொண்டால் அது அரசிடமிருந்து பெற்ற நிதியை 18% வருடாந்திர அபராத வட்டியுடன் திருப்பியளிக்கும் அல்லது அரசு தேவையென்று நினைக்கும் வேறெந்த நடவடிக்கையையும் ஏற்பதாக உறுதிமொழி கொடுக்க வேண்டும்.

e(e)

தகுதி அம்சங்களைப் பூர்த்தி செய்யும் பெண்களே பயிற்சிக்குத் தேர்வு செய்யப்பட வேண்டும். இதற்கு நிறுவனமே முழு பொறுப்பு.

f(f)

இத்திட்டத்தினை செயல்படுத்துதல் சார்ந்த அனைத்து ஆதாரங்களும் மத்திய அரசு/மாநில அரசு/மத்திய ஆட்சிக்குட்பட்ட யூனியன் பிரதேசங்களின் அதிகாரிகளின் ஆய்விற்கு உட்படுத்தப்படலாம் என்று உறுதிமொழியளிக்க வேண்டும்.

(g) நிறுவனமானது திட்டம் முடிந்த பிறகு, பயன்பாட்டு சான்றிதழ் (GFR-19A), மற்றும் பட்டயக் கணக்கரால் தணிக்கை செய்யப்பட்டு சான்றளிக்கப்பட்ட கணக்குகளை பின்வரும் ஆவணங்களுடன் சிறுபான்மை விவகாரங்கள் அமைச்சகத்திற்கு சமர்ப்பிக்க வேண்டும்:-

(i) அவ்வாண்டில் பெறப்பட்ட நிதிக்கு முறையாக தணிக்கை செய்யப்பட்ட அவ்வாண்டிற்கான வரவு செலவுக் கணக்கு விவரங்களை அளிக்க வேண்டும்.

ii)

இதே திட்டத்திற்கு வேறெந்த இந்திய அரசின் அமைச்சகம்/துறை, மாநில அரசு/மத்திய ஆட்சிக்குட்பட்ட பகுதிகளின் துறை மேலும் எவ்வொரு அரசு/அரசு சாராத நிறுவனங்கள்/ ஐ நாவின் இரு தரப்பு/பல தரப்பு நிதி முகமைகளிடமிருந்தோ நிதி/கொடையை நிறுவனமானது பெறவில்லை என்பதற்கான சான்றிதழ்.

(h)

இத்திட்டம் சார்ந்த நிகழ்ச்சிகள் நடைபெறும் இடங்களில், பயிற்சி/பயிற்சி பட்டறையானது இந்திய அரசின் சிறுபான்மை விவகாரங்கள் அமைச்சகத்தின் சார்பில் நடத்தப்படுவதாக குறிப்பிடப்பட்ட பதாகைகள்/தட்டிகள் வைக்கப்பட்டு இருக்க வேண்டும்.

(i) நிகழ்ச்சிகளைப் பற்றிய முன் அறிவிப்புகள் அமைச்சகத்திற்கு/மாநில அரசிற்கு முன் கூட்டியே தெரிவிக்கப்பட வேண்டும். ஆகையால் தேவையெனில் அதிகாரிகள் பயிற்சி திட்டங்களை கண்காணிக்க நியமிக்கப்படுவார்கள்.

(j) பயிற்சிக்கு/பட்டறைக்கு ஆதாரமாக வைத்திருக்கும் புகைப்படங்கள் ,வீடியோ படத்துண்டுகளை அமைச்சகத்திற்கு அளிக்க வேண்டும்.

திட்டத்திற்காக வெளிடப்பட்ட துண்டு பிரசுரங்கள், விளம்பர விவரங்கள் முதலியனவையும் அமைச்சகத்திற்கு அளிக்கப்பட வேண்டும்.

(k) நிறுவனத்தின் திட்டங்களில் மாற்றம் செய்வதற்கோ அல்லது செலவு மதிப்பீட்டில் மாற்றம் செய்வதற்கோ இந்திய அரசிற்கு உரிமையுள்ளது.

(l) கொடையை அளிப்பதற்கு முன்பு வேறெந்த நிபந்தனைகளையும் விதிக்கும் அரசிற்கு உரிமையுள்ளது.

**Short listing of NGOs/Organisations/Institutions**

தொண்டு நிறுவனங்கள் / நிறுவனங்கள் / நிறுவனங்களைத் தேர்வு செய்தல்:

19. பொது நிதி விதிகள்/அரசின் சம்பந்தப்பட்ட கட்டளைகளின்படி முன் தகுதியைப் பூர்த்தி செய்யும் நிறுவனங்கள் ஒரு தேர்வுக் குழுவினால் தேர்ந்து எடுக்கப்படும்.

திட்டப் பரிந்துரைகளைத் தயாரித்தல்

**Preparation of project proposal**

20.1 சிறுபான்மையினப் பெண்களின் தலைமைப் பண்பு மேம்பாட்டு திட்டத்தை அமலாக்கும் நிறுவனங்களுக்கு நிதி உதவி வழங்கப்படும். தேர்வு செய்யப்படும் நிறுவனங்கள் திட்டப் பரிந்துரையைத் தயாரிக்க கேட்டுக் கொள்ளப்படுவார்கள். அது அமைச்சகத்தின் அனுமதிக் குழுவின் முன் வைக்கப்படும். திட்டக் காலம் அதிக பட்சமாக ஓராண்டு காலமாக வரையறுக்கப்படும்.

20.2 சிறுபான்மையினர் விவகாரங்களுக்கான அமைச்சகத்திடம் அளிக்கப்படும் சிற்பான்மையின பெண்களின் தலைமைப் பண்பு மேம்பாட்டுத் திட்டப் பரிந்துரை ஒரு பிராந்திய திட்டமாக குறிப்பிட்ட கிராமம்/பிரதேசத்திற்கான பரிந்துரையாக இருத்தல் வேண்டும். அது பெண்களுக்கு அதிகாரமளித்தலையும் ,தைரியமானவர்களாக ஆக்குதலையும் பூர்த்தி செய்வதுடன் அதனை ஊக்கப்படுத்தி அதன் பலன்கள்/விளைவுகளைக் கண்காணிக்கவும் வேண்டும். குடிமை/அடிப்படை வசதிகள் மற்றும் சமூக-பொருளாதார நிலைகள் தொடர்பான உள்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சேவைகள் மிகக் குறைவாக இருக்கும் பின்தங்கிய கிராமம்/பிரதேசம் தேர்வு செய்யப்பட்டால், அதனால் கிராம/பிரதேச பெண்கள் பொருத்தமான அதிகாரிகளை கிராம, ஒன்றிய, மாவட்ட அல்லது மாநில அளவில் சந்தித்து அவர்களின் பிரச்சினைகள் மற்றும் குறைகளை களைய அணுகும் அதிகாரத்தைப் பெறுவர். பயிற்சிக்குப் பின்னர் பெண்கள் தீர்வு காண எண்ணும் தங்களது கிராம/பிரதேசங்களில் சந்தித்த பல்வேறு பிரச்சனைகளின் பட்டியலும் திட்டத்தில் இடம் பெற வேண்டும்.

20.3 திட்டப் பரிந்துரையில் பெண்களுக்கான பயிற்சியில் ஒவ்வொரு கிராமம்/பிரதேசத்தில் இருக்கும் அடிப்படை வசதிகள் மற்றும் சேவைகள் பற்றிய விரிவான அடிப்படைத் தகவல்களை உட்கொண்டிருக்க வேண்டும். திட்டப் பரிந்துரையில் பின்வரும் துறைகளில் தற்போது இருக்கும் அரசு பணியாளர்களின் இருப்பு, நிலை,உள்கட்டமைப்பு மற்றும் சேவைகள்,சேவைகள் அளிப்பதில் தரம், சந்திக்கும் பிரச்சனைகள்,நடைமுறைப்படுத்துவதில் உள்ள சிக்கல்கள் உள்ளிட்டவற்றை குறிப்பிட வேண்டும். (அ) பள்ளிகளில் கல்வி, மதிய உணவு (ஆ) அங்கன்வாடி மையங்களில் ஊட்டச்சத்து, (இ) உடல் நலம், மருத்துவ மனைகளில் நடைபெறும் பிரசவங்கள், மருத்துவ/ துணை மருத்துவ மையங்களில் குடும்பக் கட்டுப்பாட்டு சேவைகள், (ஈ) நியாய விலைக்கடைகளில் அத்தியாவசிய பொருட்கள், (உ) குடிநீர் வழங்கல், (ஊ) கழிவறைகள்/சுகாதார வசதிகள், (எ) மின்சார வசதிகள் (ஏ) வேலைவாய்ப்புகள், (ஐ) திறன்

வளர்ப்பு/மேம்பாடு, (ஒ) பெண்களுக்கு எதிரான குற்றங்கள், (ஓ)வங்கி சேவைகள் முதலியனவாகும். இப்பயிற்சிக்குப் பின்னர், துணிவூட்டப்படும் பெண்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் தங்களது உரிமைகளை முன் நிறுத்தி இப்பிரச்சனைகளுக்குத் தீர்வு காண இயலும்.

20.4 பள்ளிகளின் கோடை விடுமுறை/பொது விடுமுறையின் போது நடத்த இருக்கும் பயிற்சி திட்டத்திற்கு முன்னுரிமை கொடுக்கப்படும். அதனால் பள்ளிகள் பயிற்சி திட்டத்திற்கு இடமாக கிடைக்கும் மற்றும் செலவும் குறைகிறது.

20.5 பயிற்சியில் அரசு அதிகாரிகளின் பங்கேற்பை அனுமதிக்கும் நிறுவனங்களுக்கும் முன்னுரிமை தரப்படும்.

20.6 ஒரு குழுவானது, பயிற்சிக்குப் பின்னர் பொருளாதார ரீதியான திட்டங்களை செயல்படுத்த விரும்பினால் , அவர்களின் திட்டங்களுக்கு தேசிய சிறுபான்மையினர் மேம்பாடு & நிதி கழகத்தால் (NMDFC) விதிமுறைகளுக்கு உட்பட்டு முன்னுரிமை அளிக்கப்படும்.

## அளவிடக்கூடிய விளைவுகள்

**Measurable outcomes**

21. வீடு, சமூகம் போன்ற குறிப்பிட்ட எல்லைகளுக்குள் வாழும் சிறுபான்மையினர் சமுதாயப் பெண்களுக்கு அதிகாரம் அளித்து, ஊக்குவித்து, எழுச்சி பெறச் செய்து அவ்வெல்லைகளை விட்டு வெளியே கொண்டு வந்து, தலைமைப்பாத்திரத்தை ஏற்று தேவைப்படும் வசதிகள்,சேவைகள், வாய்ப்புகள் , திறமைகள் முதலியவற்றைப் பெறுவதில் தங்களின் உரிமைகளை நிலைநாட்ட அவர்கள் ஒன்று திரண்டோ அல்லது தனித்தனியாகவோ போராட வேண்டும். இத்துடன் தங்களின் வாழ்க்கைத் தரம் மேம்படுத்துதல் தொடர்பான மேம்பாட்டு பலன்களில் தங்களுக்குக் கிடைக்க வேண்டிய பங்கைக் கோரவும் வேண்டும்.இதனை எந்த அளவிற்கு பயிற்சி பெற்ற பெண்கள் செய்கிறார்கள் என்பதை வைத்து இப்பயிற்சி திட்டத்தின் வெற்றியை/பயன்பாட்டை அளவிட முடியும். சிறுபான்மையினப் பெண்களின் மேம்பாட்டு பயிற்சிக்காக தேர்வு செய்யப்பட்ட கிராமம்/பிரதேசத்தின் உள்கட்டமைப்பு, வசதிகள் மற்றும் சேவைகள் தொடர்பான குடிமை/அடிப்படை வசதிகள் மற்றும் சமூக-பொருளாதார நிலைகள் உள்ளிட்ட அடிப்படை விவரங்கள் நிறுவனத்தின் திட்ட பரிந்துரைகளில் குறிப்பிடப்பட்டு இருக்கும்.திட்டத்தின்

அமலாக்க காலத்தின் போது  பெண்களின் தலையீட்டிற்கு முன்னரும் பின்னரும் அவைகளின் நிலைமைகள் அலசப்பட வேண்டும்.

**ஒப்புதல் குழு**

**Sanctioning Committee**

சிறுபான்மையினர் விவகாரங்களுக்கான அமைச்சகத்தினால் பின் வரும் அனைத்தையும் உள்ளடக்கிய ஒப்புதல் குழுவை உருவாக்கலாம்.அக்குழு சமர்பிக்கப்பட்ட திட்டங்களைப் பரிசீலித்து திட்டத்தை அமல்படுத்துவத்ற்கான ஒப்புதலை வழங்கலாம்.

a) செயலாளர், சிறுபான்மை விவகாரங்கள் அமைச்சகம் – தலைவர்

b) நிதி ஆலோசகர், சிறுபான்மை விவகாரங்கள் அமைச்சகம்

c) இணைச் செயலாளர், மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம் – உறுப்பினர்

d) இணைச் செயலாளர், பள்ளி கல்வி & எழுத்தறிவு துறை –உறுப்பினர்

e) இணைச் செயலாளர், கிராம மேம்பாட்டு அமைச்சகம் – உறுப்பினர்

f) துணை பொது இயக்குநர், கவுன்சில் ஃபார் அட்வான்ஸ்மெண்ட் ஆஃப் ப்யூப்பிள்ஸ் ஆக்ஷன் அண்ட் ரூரல் டெக்னாலஜி (CAPART) – உறுப்பினர்

g) செயலாக்க இயக்குனர், ராஷ்ட்ரிய மஹிளா கோஷ் (RMK) – உறுப்பினர்

h) ஆலோசகர், சிறுபான்மை நல துறை, திட்ட கமிஷன் - உறுப்பினர்

i) நிர்வாக இயக்குநர், தேசிய சிறுபான்மையினர் வளர்ச்சி மற்றும் நிதி கழகம் (NMDFC) – உறுப்பினர்

j) இணைச் செயலாளர், சிறுபான்மை விவகாரங்கள் அமைச்சகம் (திட்டம் கையாள்வதில்)-அவைக்கூட்டுநர் மற்றும் உறுப்பினர்

தொடர்புடைய முதன்மைச் செயலர்,மாநிலத்தின்/மத்திய ஆட்சிக்குட்பட்ட பிரதேசத்தின் செயலர் ஆகியோரை நிறுவனத்தின் தேர்வின் போது பங்கேற்க அமைச்சகம் அழைக்கலாம்.

நிதி வெளியீடு

**Release of fund**

23. நிறுவனத்தால் அளிக்கப்படும் பத்திரமானது இரு பிணையயங்களுடன் நிதியை ஈடு செய்வதாக கொடுக்கப்பட்டால் நிதியானது நேரடியாக நிறுவனத்திற்கு கொடுக்கப்படும். தொடர்புடைய நிறுவனத்திற்கு அமைச்சகத்தால் நிதி வெளியிடப்படுவது அனுமதிக்கப்பட்ட திட்டப் பரிந்துரையின் அடிப்படையில் பின்வருமாறு இருக்கும்:-

(அ) கிராம/பிரதேசத்தில் தலைமைப் பண்பு மேம்பாட்டு பயிற்சி:

**(a) Leadership development training in the village/locality:**

முதல் தவணை: பயிற்சி ஆரம்பிக்கும் முன்னே மொத்த திட்டத் தொகையில் இருந்து 50% விடுவிக்கப்படும். இந்த வெளியீட்டுத் தொகை பயிற்சி நடத்தவும் படி/உபகாரச் சம்பளம் கொடுக்கவும் ஆகும் செலவை ஈடுகட்ட வேண்டும்.

இரண்டாம் தவணை: அனுமதிக்கப்பட்ட திட்டச் செலவில் 25% பயிற்சி வகுப்பானது திருப்தியாக முடிவடைந்தது எனும் சான்றிதழை சமர்பிக்கும் பொழுது வெளியிடப்படும்.

அது முறையாக பயிற்சி பெற்ற பெண்களில் 75%பேர் கையொப்பமிட்டும் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகளால் (ஊராட்சித் தலைவர், அல்லது ஒன்றிய வளர்ச்சி அதிகாரி.உட் கோட்ட அதிகாரி)பிரதி கையொப்பமிடப்பட வேண்டும். பயன்பாட்டு சான்றிதழ் சமர்ப்பிப்பும் அவசியம்.

மூன்றாம் தவணை: அனுமதிக்கப்பட்ட திட்டச் செலவில் 25% பயிற்சி வகுப்பானது திருப்தியாக முடிவடைந்தது எனும் சான்றிதழை சமர்பிக்கும் பொழுது வெளியிடப்படும். அது முறையாக பயிற்சி பெற்ற பெண்களில் 75%பேர் கையொப்பமிட்டும் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகளால் (ஊராட்சித் தலைவர், அல்லது ஒன்றிய வளர்ச்சி அதிகாரி.உட் கோட்ட அதிகாரி)பிரதி கையொப்பமிடப்பட வேண்டும்.

பயன்பாட்டு சான்றிதழ் சமர்ப்பிப்பும் அவசியம். இதில் பயிற்சி பட்டறைகளுக்கான செலவும் உள்ளடங்கும்.

(ஆ) தங்கிப் பயிலும் தலைமை மேம்பாட்டு பயிற்சி:

**(b) Residential leadership development training**

ஒட்டு மொத்த வெளியீடு: ஒட்டு மொத்த வெளியீடு: தங்கிப் பயிலும் பயிற்சிக்குக் [அதாவது பத்தி எண் 14 இல் உள்ள அட்டவணை 2 (அ), (ஆ) மற்றும் (ஈ) ]கொடுக்கப்படும் முழு தொகையும் நேரடியாக பயிற்சி அமைப்பிற்கு வெளியிடப்பட வேண்டும். அது தொடர்புடைய நிறுவனத்திற்கு ஒட்டு மொத்த பரிமாற்றமாக மின்னணு வங்கி பரிமாற்றம் மூலம் எங்கெல்லாம் அத்தகைய பரிமாற்றம் இருக்கிறதோ அங்கெல்லாம் வெளியிடப்படும். தொடர்புடைய நிறுவனத்திற்கான மீதமுள்ள நிதி மேலேயுள்ள பத்தி எண் 23 (அ)வில் கொடுக்கப்பட்டுள்ளது போல வெளியிடப்படும்.

***மின்னணு வழி நிதி பரிமாற்றம்***

**Electronic fund transfer**

24. வங்கிகளால் எங்கெல்லாம் மின்னணு பரிமாற்ற மூலம் நிதி அனுப்ப முடியுமோ அங்கெல்லாம் செய்யப்படும்.

நிறுவனத்தின் கணக்கில் நேரடியாக மின்னணு பரிமாற்றத்தை சாத்தியமாக்க ECS, RTGS NIFT, TTs வசதியைப் பெற தன்னார்வத் தொண்டு நிறுவனம் பணம் பெறுபவரிடமிருந்து அங்கீகாரக் கடிதத்தைக் கொடுக்க வேண்டும். ECS, RTGS ,NIFT, TT -மூலம் பயிற்சி அளிக்கும் நிறுவனத்தின் கணக்கில் நேரடியாக மின்னணு பரிமாற்றத்தை சாத்தியமாக்க, தன்னார்வத் தொண்டு நிறுவனம் பணம் பெறுபவரின் பெயர், வங்கி IFSC குறியீடு எண், வங்கி கிளை எண், வங்கி கிளை பெயர் முதலியவற்றின் முழுத் தகவல்களைக் குறிப்பிட்டு பணம் பெறுபவரிடமிருந்து அங்கீகாரக் கடிதத்தைக் கொடுக்க வேண்டும்.

அங்கீகாரக் கடிதத்தில் தவறான கணக்கு எண்ணைத் தவிர்க்க வங்கியின் மேலாளர் பிரதி கையெழுத்து இட வேண்டும். முழு நிதியாண்டிற்கும் ஒரேயொரு அங்கீகாரக் கடிதம் மட்டுமே போதும் அல்லது கணக்கு எண் அவ்வாண்டில் மாற்றப்படும் வரை போதும். அங்கீகாரக் கடிதத்தின் ஒரு மாதிரிப் படிவம் இணைக்கப்பட்டுள்ளது.

வெளிப்படைத்தன்மை

**Transparency**

25. நிறுவனத்தின் இணைய தளத்தில் அவர்களின் நிறுவனம் பற்றிய விவரங்கள்,தலைமை அலுவலகம், கள அலுவலகங்கள், தொலைபேசி எண்கள்,பணியாளர்கள், கடந்த செயல்பாடுகள் மற்றும் நடவடிக்கைகள் பற்றிய விவரங்கள் ,இத்திட்டத்தின் கீழ் பயிற்சி கொடுக்கப்பட்ட பெண்களின் பெயர் , முகவரி, மற்றும் பெண்களின் தொலைபேசி எண் முதலியவற்றை உள்ளடக்கிய முழு விவரங்கள் , பயிற்சியின் போதும் பயிற்சிக்குப் பிறகும் அவர்கள் தங்களது வாழ்க்கைத்தரத்தினை மேம்படுத்திக் கொள்ள மேற்கொண்ட நடவடிக்கைகள் உள்ளிட்டவற்றை தெரியப்படுத்தப்படும். மேலும் இத்தகவல்கள் அமைச்சகத்திற்கு அளிக்கப்படுகிறது.இந்தத் தகவலை அமைச்சகத்திற்கு அளிப்பது சமூக தணிக்கையை சாத்தியமாக்குவதற்கு ஒரு முக்கிய கூறாகும்.

அமைப்பானது கிராமம்/பிரதேசத்திலும் பயிற்சி அமைப்புகளிலும் நடத்தப்பட்ட தலைமைப் பயிற்சியின் போதான புகைப்படங்கள், வீடியோ (காணொளி) படத்துண்டுகள் மற்றும் கேள்வி பதில் அமர்வுகள் உட்படவற்றை இணைய தளத்தில் இடவும் அமைச்சகத்திற்கு கிடைக்கச் செய்யவும் வேண்டும்

**Evaluation**

மதிப்பீடு

26. திட்டத்தை மதிப்பீடு செய்வதும் அதன் பலன்களை ஆராய்ந்து அலசுதலும் அரசால் நியமிக்கப்பட்ட வல்லுநர் முகமையால் தேவையானபோதும் அவ்வப்போதும் நடத்தப்படும்.

அத்தகைய ஆய்வுகள் அமைச்சகத்தின் நடப்பில் உள்ள ஆய்வு திட்டங்கள், கண்காணிப்பு மற்றும் மதிப்பீடின் கீழ் நிதியுதவி பெறும். ஓராண்டு அமலாக்கத்திற்குப் பிறகு திட்டம் ஆய்வுக்குட்படுத்தப்படும்.